செய்தி வெளியீடு எண்: 274 நாள் : 09.06.2016

# செய்தி வெளியீடு

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 17, மண்டல பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் பிப்ரவரி மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் **11.06.2016** அன்று காலை **10.00** மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 17 மண்டல பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை நடுநிலைப் பள்ளி, 45, படவட்டம்மன் கோயில் தெரு, கொண்டித்தோப்பு, சென்னை – 600079 (தங்கசாலை புதிய பேருந்து நிலையம் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை உயர் நிலைப் பள்ளி, 2/1, மணிகண்டன் 8வது தெரு பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. |
| 3 | பெரம்பூர் | சென்னை உயர் நிலைப் பள்ளி எண்.3 சுந்தரம் மெயின் தெரு, கணேசபுரம் , வியாசர்பாடி , சென்னை – 39. (வியாசர்பாடி இரயில் நிலையம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி, 104 –வது கோட்ட அலுவலகம், லெட்டாங்ஸ் ரோடு வேப்பேரி சென்னை–7 (சி எஸ் ஐ ஈவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி அருகில்) |
| 5 | அம்பத்தூர் | எபினேசர் மெட்ரிகுலேசன் பள்ளி, எண்.73, லிவிங்க் ரோடு, செல்லியம்மன் நகர், அத்திப்பட்டு, அம்பத்தூர் சென்னை–58. (செல்லியம்மன் கோவில் அருகில் ) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மேல்நிலைப் பள்ளி, 7/20,பள்ளிக் கூடத் தெரு, கோயம்பேடு, சென்னை–107 (நாதள்ளா சுலோச்சனா திருமண மண்டபம் எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | ஜெயகோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளி, விம்கோ, திருவொற்றியூர், சென்னை–19. (அஜாக்ஸ் பஸ் நிலையம் அருகில்) |
| 8 | ஆவடி | ஆவடி நகராட்சி தொடக்கப்பள்ளி, சத்திரம், பட்டாபிராம், சென்னை–72 (பட்டாபிராம் பஸ் நிலையம் அருகில்) |
| 9 | ஆர்.கே.நகர் | OLK சென்னை தொடக்கப் பள்ளி, மீனாம்பாள் நகர், கொருக்குபேட்டை, சென்னை –21.(கொருக்குபேட்டை மேம்பாலம் அருகில்) |

| | | |
|---|---|---|
| 10 | தி.நகர் | சென்னை தொடக்கப் பள்ளி, எண் 18, ஈஸ்வரன் கோவில்தெரு, மேற்குமாம்பலம், சென்னை.600 033. (மேட்லி சுரங்கப் பாதை அருகில்) |
| 11 | மயிலாப்பூர் | பி.எஸ்.மேனிலைப்பள்ளி, எண்.215, ஆர்.கே.மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004, (இராமகிருஷ்ண மடம் எதிரில்) |
| 12 | பரங்கிமலை | நிதி மேல் நிலைப் பள்ளி, ஆலந்தூர், சென்னை.16. (பரங்கிமலை இரயில் நிலையம் அருகில்), |
| 13 | தாம்பரம் | கிராம ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ராஜீவ் காந்தி தெரு, திருவஞ்சேரி, சென்னை 600 126. (திருவஞ்சேரி நியாய விலை அங்காடி அருகில் |
| 14 | சைதாப்பேட்டை | சென்னை நடுநிலைப் பள்ளி, 21, பெருமாள் கோவில் தெரு, மேட்டுப்பாளையம், சென்னை–600 033 (பெருமாள் கோவில் அருகில்) |
| 15 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி சமூக நலகூடம், எண்.33, கவிஞர் பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை,18. (எஸ்.ஐ,இ,டி கல்லூாரிஅருகில்) |
| 16 | சேப்பாக்கம் | மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம், லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை–14. |
| 17 | சோழங்கநல்லூர் | வார்டு எண் 193 , மாமன்ற உறுப்பினர்அலுவலகம், ராஜீவ் காந்தி சாலை, துரைப்பாக்கம், சென்னை–97 (ஜெயின் காலேஜ் அருகில்) |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**